பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 வைகாசி 2 ஒளி 13 இதழ் 90
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-5-84

## இந்தியப்பிரதமரின் உருக்கமான கோரிக்கை

(புதுடில்லி)

"இலங்கையில் அமெரிக்கத் தம்பதிகள் கடத்தப்பட்ட சம்பவம் எனக்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது. இலங்கை அரசு, அமெரிக்க அரசு ஆகியவற்றுடன் இந்திய அரசு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அவர் தம்பதிகளை விடுதலைசெய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை மனிதாபிமானத்துடன் கேட்டுக்கொள்கிறேன். இலங்கை அரசு இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளதையும் சுட்டிக்காட்டவிரும்புகிறேன்"

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அமெரிக்கத் தம்பதிகள் கடத்தப்பட்டது தொடர்பாக கடத்தியவர்களுக்கு நேற்று விடுத்த அவசர வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

## ஜோர்ஜ்புஷ் பார்த்தசாரதி சந்திப்பு

(புதுடில்லி)

அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷை இந்தியப்பிரதமரின் சிறப்புத்தூதர் திரு ஜி. பார்த்தசாரதி நேற்று சந்தித்து இலங்கை பிரச்னைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்தே திரு. பார்த்தசாரதி அமெரிக்க உபஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியதாகத்தெரிவித்த இந்தியதொலைக்காட்சி அமெரிக்க தம்பதிகள் கடத்தல் குறித்தும் இவர்கள் பேசினதாக தெரிவித்தது.

★ நேற்றிரவு கிடைத்த கடைசிச் செய்தி ★

# அமெரிக்க தம்பதிகள் விடுதலை!

கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதிகள் கிளிநொச்சிப் பகுதியில் நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக தெரிய வந்துள்ளது. எனினும் அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றிரவு தெரிவித்தார். (8-ம் பக்கம் பார்க்க)

# இந்திரா, எம்.ஜி.ஆர். கோரிக்கை:

# ஈழமக்கள் பு. வி. மு. ஏற்றது!

## உடன் விடுதலை செய்யுமாறு சென்னையிலிருந்து உத்தரவு

(சென்னை)

கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதிகளை உடன் விடுதலைசெய்யுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் மத்தியகுழு தமது உறுப்பினர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டே இந்த முடிவுக்கு வந்ததாக முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் திரு. கா. பத்மநாபன் நேற்று மாலை கூறினார்.

இந்த முன்னணியே அமெரிக்கத் தம்பதியரைக் கடத்தியதாக ஏற்கனவே அறிவித்திருந்தது. நேற்று இம் முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர் திரு. பத்மநாபா அவசர அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இந்த அறிக்கையில் மத்திய கமிட்டியின் தீர்மானத்தின்படி விடுதலை செய்யுமாறு தமது தோழர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதாக குறிப்பிட்டுள்ளார். தமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அரசாங்கமும் கைதிகள் அனைவரையும் விடுதலைசெய்யும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## "உலகத்தமிழருக்கு பாதிப்பு ஏற்படலாம்"

### தமிழக முதல்வர் கருத்து

(சென்னை)

"அமெரிக்கத் தம்பதிகள் கடத்தப்பட்டமையால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது. இதனால் 5 கோடி தமிழ மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது"

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் அமெரிக்க தம்பதிகளை கடத்தியவர்களுக்கு விடுத்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ் வேண்டுகோளில் "கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதிகளை மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க தம்பதியர் வீட்டில் துப்பாக்கிஇளைஞர் அட்டகாசம்!

### அமைச்சர் 'லலித்' தகவல்

(கொழும்பு)

அமெரிக்கத் தம்பதிகள் தங்கியிருந்த குருநகர் வீட்டினுள் புகுந்த ஆயுதந்தாங்கிய மூன்று இளைஞர்கள் அங்கிருந்த சில தஸ்தாவேஜுகளை எடுத்துச் சென்றதுடன் வேலைக்காரரை யும் பயமுறுத்தி அட்டகாசம் புரிந்தனராம்.

நேற்று இந்த வீட்டினுள் புகுந்த இளைஞர்கள் வேலைக்காரரை பயமுறுத்திவிட்டு, அமெரிக்க தம்பதிகளின் கடித தலைப்புகளை அங்கிருந்து எடுத்துச் சென்றதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நேற்று தெரிவித்தார்.

இத்தம்பதியர் சி ஐ ஏ ஏஜண்டுகள் தான் என்பதை முறைகளைப்படுத்தி நிரூபிப்பதற்கு முயற்சிசெய்யப்படலாம் இதை அவதானித்து செய்யப்படுகின்றதாக அமைச்சர் தெரிவித்தார்.

## தொண்டமான் விடுத்த அவசரக் கோரிக்கை

(கொழும்பு)

"இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்னையை முழு உலகிற்கும் எடுத்துக்காட்டவும், அதன் மூலம் இனப்பிரச்னைக்கு விரைவான தீர்வொன்றினைக் காணும் நோக்கத்துடனேயே அமெரிக்கத் தம்பதிகள் கடத்தப்பட்டிருக்கின்றார்கள் இந்த நோக்கத்துக்காக கடத்தல் காரர்கள் அவர்கள் தம்பதிகளை கடத்தியிருந்தால் அவர்களின் அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. அத்துடன் கடத்தியவர்களுடன் தாம் பேச்சுநடாத்த தயார் என்ற தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி விடுத்துள்ள வேண்டுகோளையும் கடத்தல்காரர்கள் (8-ம் பக்கம் பார்க்க)

## காலக்கெடுவை நீடிக்குமாறு

### அமைச்சர் 'லலித்' இறுதிநேரக் கோரிக்கை

(கொழும்பு)

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திருலலித் அத்துலத்முதலி அமெரிக்கத் தம்பதிகளைக்கடத்தியவர்களுக்கு விடுத்த இறுதி நேர அவசரவேண்டுகோள் வருமாறு:

"அவ் தம்பதிகளை பணயக்கைதிகளாக வைத்திருப்பவர்களுடன் நான் பேசவிருக்கின்றேன். இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மத்திய நிலைமைகளின் சார்பிலும், ஜனநாயகத்தின் சார்பிலும் (8ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

ஞாயிற்றுக்கிழமை இழுக்கப்பட்ட 966-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு 8-ம் பக்கம் பார்க்க)

# நமீபிய சுதந்திரம் தொடர்பான லுஸாக்கா மகாநாடு தோல்வி!

## இறுதி அறிக்கை தயாரிக்கப்படவில்லை!!

லுஸாக்கா, மே. 14

நமீபியாவின் சுதந்திரம் தொடர்பாக தென்னாபிரிக்கா மற்றும் நமீபிய விடுதலை இயக்கங்களிடையே நடைபெற்ற மாநாடு எதுவித தீர்வுமின்றி முடிவடைந்துள்ளது.

ஸாம்பியா ஜனாதிபதி திரு கென்னத் கவுண்டா இந்த மாநாட்டின் தமது நாட்டின் தலைநகரான லுசாக்காவில் கூட்டியிருந்தார். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் தென்னாபிரிக்கப் பிரதிநிதிகளும் நமீபிய சுதந்திர விடுதலை இயக்கங்களின் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர். கென்னத் கவுண்டா மாநாட்டில் முக்கிய பேச்சாளராக இருந்தார்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கோரிக்கைகளுக்கு இணங்க நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கப்படவேண்டுமென்பது மாநாட்டில் முக்கிய கோரிக்கையாக இருந்த போதும், தென்னாபிரிக்கப் பிரதிநிதிகள் இந்த கோரிக்கை குறித்து அக்கறை காட்டாததினால் மாநாடு எதிர்பார்த்தளவு வெற்றி பெறவில்லை.

மாநாட்டில் இறுதியறிக்கை ஒன்றை தயாரிப்பதில் பிரதிநிதிகள் முயற்சிசெய்தபோதும் அந்த அறிக்கை கூட இறுதியில் தயாரிக்கப்படாமல் மாநாடு முடிவுற்றது. ஆயினும் தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெற வாய்ப்புண்டு என்று ஸாம்பியா ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் தீர்மானங்களுக்கமைவாக தென்னாபிரிக்கா நமீபியாவின் ஆதிக்கம் செலுத்திவருவது தெரிந்ததே. (சு)

### ஆப்கான் பகிஷ்கரிக்கும்

காபூல் மே. 14

லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியினைப் பகிஷ்கரிப்பதென ஆப்கானிஸ்தான் அறிவித்துள்ளது.

அமெரிக்க ஒலிம்பிக் விதிகளை மீறி வருவதாகவும், ஆப்கான் அதிகாரிகள் பிரகடிவருவதினாலும் தமது நாடு போட்டியினைப் பகிஷ்கரிப்பதாக ஆப்கானிஸ்தான் அரசு அறிவித்துள்ளது. (சு)

### திரிபுராவில் கடும் மழை 6 பேர் பலி!

புதுடில்லி, மே 14

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையினால் ஏற்பட்ட மண்சரிவில் 6 பேர் பலியானார்கள்.

மாநிலத்தில் எல்லா நதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதினால் 80 000 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 1,500 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளனர். (சு)

### பொருளாதார நிபுணர் நடராஜன் காலமானார்

[சென்னை]

இந்தியாவின் பிரபல பொருளாதார நிபுணரும், தமிழ்நாடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான வி நடராஜன் தமது 75வது வயதில் நேற்று காலமானார்.

இவர் தமிழக அரசின் பொருளாதாரத்துறை ஆலோசகராகவும், ஆந்திர காதிக அபிவிருத்தி துறை ஆலோசகராகவும், திட்டக்கமிஷன் உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார்.

1962-67ம் ஆண்டு காலப்பகுதியில் கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினராகவும் இவர் பதவிவகித்தார். (சு)

## வளரும்நாடுகளுக்கு சர்வதேச தொழில் ஸ்தாபனம் உதவவேண்டும்!

### அணிசேரா நாடுகள் கோரிக்கை

மனகுவா, மே. 14

வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த சர்வதேச தொழில் ஸ்தாபனம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று அணிசேரா நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

நிக்கரகுவா தலைநகர் மனகுவாவில் நடைபெற்ற உலக நாடுகளின் தொழிலமைச்சர்கள் கலந்துகொண்ட இரண்டு நாள் மாநாட்டில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஏகாதிபத்தியம், காலனித்துவம், பாஸிசம் போன்ற எதேச்சாதிகார சக்திகளை எதிர்த்து போராடுவதில் அணிசேரா நாடுகள் முனைந்து வருகின்றன. இந்த நியாயமான கோரிக்கைகளுக்கு சர்வதேச தொழில் ஸ்தாபனம் ஆதரவு வழங்க வேண்டுமென்று மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

நிக்கரகுவா துறைமுகங்களில் கண்ணி வெடிகளை அமெரிக்கா வைத்திருப்பதனை மாநாடு கண்டித்துள்ளதுடன், இது தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தின் கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. (சு)

### பாடசாலை மாணவர்களின் நலன்கருதி

## விசேட பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாக மருதனார்மடம்வரை விசேட பாடசாலை பஸ் சேவை ஒன்றை நடத்துமாறு, யாழ்ப்பாணம், கொக்குவில், மானிப்பாய் பகுதிகளைச் சேர்ந்த பத்துப் பாடசாலைகளின் அதிபர்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளரைக் கோரியுள்ளனர்.

பாடசாலை மாணவ மாணவிகளின் வசதிகளை முன்னிட்டு காலை 7-45 மணிக்கு யாழ். நகரிலிருந்து மருதனார்மடம் வரையும், மாலை 3-30 மணிக்கு மருதனார்மடத்திலிருந்து யாழ்ப்பாணம்வரைக்கும் இந்த விசேட பாடசாலை சேவையை நடத்துமாறு இந்த அதிபர்கள் தமது கோரிக்கையில் கேட்டுள்ளனர்.

இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல், மானிப்பாய் மகளிர், மானிப்பாய் இந்து, மானிப்பாய் சென். அன்ஸ், சித்திவிநாயகர் பாரதி வித்தியாலயம், கொக்குவில் இந்து, யாழ். இந்து, யாழ் இந்துமகளிர் ஆகிய கல்லூரி அதிபர்கள் இந்தக் கோரிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

### ரூபவாஹினியில் இன்று

மாலை

- 5-30 'ஹெட்லங் அன்ட் ரெபிக்ஸ்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
- 5 45 வெசாக் நிகழ்ச்சி
- 6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
- 6-30 தகவல் நிகழ்ச்சி
- 6-55 செய்திகள் (தமிழ்)
- 7-15 எதிர்கால நிகழ்ச்சிகள்
- 7-40 'பிளேக்-7' (ஆங்கிலம்)
- 8-15 செய்திகள் (தமிழ்)
- 8-35 'பிளேக்-7' (தொடர்ச்சி)
- 8-55 "டாடீஸ் ஆர்மி" (ஆங்கிலம்)
- 9-30 செய்திகள் (ஆங்கிலம்)
- 9 50 பௌத்த நிகழ்ச்சி
- 10-30 உலகச் செய்தித் தலைப்புகள்
- 10-35 வெசாக் நிகழ்ச்சி
- 11-30 நிகழ்ச்சிகள் முடிவு

### இளைஞர்களை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்

(பண்டத்தரிப்பு)

நேற்று முன்தினம் பண்டத்தரிப்புச் சந்தியில் நீண்ட நேரமாக இராணுவத்தினர் நின்று வீதியால் செல்லும் வாகனங்களைச் சோதனையிட்டனர்.

அத்துடன் பொதுமக்களின் அடையாள அட்டைகளையும் பரிசோதித்தனர்.

பண்டத்தரிப்பு சந்தியில் பஸ்சுக்காகக் காத்துநின்ற சில இளைஞர்களை விசாரணை செய்த பின்னர் அவர்களை ட்ரக்கில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

மாதகல்-பண்டத்தரிப்பு வீதியில் வைத்து மற்றுமொருவரும் கைதுசெய்யப்பட்டார்.

## கூட்டணி மீது

### அமைச்சர் கண்டனம்

(கொழும்பு)

"வடக்கு, கிழக்கில் பௌத்த கலாச்சாரங்களையும், பௌத்த சின்னங்களையும் அழித்தொழிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி முயற்சித்துவருவதாக கலாச்சார அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருல்லே மீண்டும் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதே குற்றச்சாட்டை ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் சபையிலிருந்தபோது தெரிவித்திருந்ததாகவும் அவர் கூறினார்.

தனிநபர் பிரேரணைமீது பேசிய கெளரவ எம். பி. திரு ஆனந்தசங்கரி வடக்கு, கிழக்கில் பௌத்த சின்னங்கள் கலாச்சாரங்கள் அழித்தொழிக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஹுருல்லே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் கண்டுபிடிக்கும் பௌத்த சின்னங்களை பாதுகாக்கும் பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் கூறினார்.

குச்சவெளியில் பௌத்த கோவிலிருந்த இடத்தில் இந்துக்கோயில் கட்டப்பட்டுவருகிறதென்றும் பொத்துவில் எம். பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் பதிலளிக்கையில், "தற்போது குச்சவெளியில் இந்துக் கோவில் கட்டும்வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், தொல்பொருள் திணைக்களம் அதுகுறித்து விசாரணை செய்துவருவதாகவும்" தெரிவித்தார். (இ-செ)

## அரபுப்பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் விலக வேண்டும்!

டமாஸ்கஸ், மே 14

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் விலகிக் கொள்ளவேண்டும் என்று சிரியாவும், ருமேனியாவும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிரியாவுக்கு விஜயம் செய்திருந்த ருமேனியாவின் துணைப் பிரதமருடன் சிரிய அதிபர் நடத்திய பேச்சுக்களின் முடிவில் இந்த அறிக்கை விடுக்கப்பட்டது.

லெபனானில் நிலைகொண்டிருக்கும் இஸ்ரேலிய படைகளை விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும் இருநாடுகளும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன. (சு)

